
Department of Education, Sabaragamuwa Province/ Weekly School Department of Education, Sabaragamuwa Province/ Weekly School




**அலகு :- முழு எண்களில் கணிதச் செய்கைகள்**

**பாடவேளைகளின் எண்ணிக்கை : 10**





23




31


மேலுள்ள ஒவ்வொரு எண்சட்டங்களிலுமுள்ள ஒன்றினிடத்திலுள்ள எண்கள் அனைத்தையும் பத்தினிடத்திலுள்ள எண்கள் அனைத்தையும் வேறோர் எண்சட்டத்தில் கீழே காட்டப்பட்டுள்ளவாறு இடுவோம்.




அதன் படி 23 + 31 = ☐ வெற்றுக்கூட்டினுள் பெறுமானத்தை எழுதுக.

கீழே காட்டப்பட்டுள்ள எண்களின் கூட்டுத்தொகையை எண் சட்டங்கள் மூலம் வகைகுறித்து விடையளிக்க.

உதா :-




21 13 34

1) 52 + 13
2) 41 + 32
3) 24 + 23

m/sir

பாடப்புத்தகத்தில் 24, 25 ஆம் பக்கங்களை நன்றாகக் கற்றுக்கொள்ளவும்.

பாடப்புத்தகத்தில் 26 ஆம் பக்கத்தைப் பார்க்கவும். இரு எண்களைக் கூட்டும் போது பின்பற்ற வேண்டிய ஒழுங்குமுறையை விளங்கிக்கொள்க.

கீழுள்ள இரு உதாரணங்களையும் நன்றாக விளங்கிக்கொள்க.

```
  674          3452
+ 289          2448
  963        + 1396
  ===          ----
               7296
               ====
```

பாடப்புத்தகத்தில் 27 ஆம் பக்கத்தில் உள்ள பயிற்சி 3.1 இன் முதலாவது வினாவைச் சரியாகச் சுருக்குக.

> எண்களைக் கூட்டும் போது ஒன்றினிடத்து இலக்கங்கள் ஒரு நிரலிலும், பத்தினிடத்து இலக்கங்கள் ஒரு நிரலிலும், நூறினிடத்து இலக்கங்கள் ஒரு நிரலிலும் என்றவாறு அமையுமாறு எண்களை எழுதிக் கூட்ட வேண்டும்.

- வெற்றுக் கட்டங்களை நிரப்பவும்.

437 + 321 = ☐

212 + 324 = ☐

☐ + ☐ = ☐

பாடப்புத்தகத்திலுள்ள பயிற்சி 3.1 இன் எஞ்சியுள்ள பிரசினங்களுக்கு விடையளிக்க.

முழு எண் ஒன்றிலிருந்து அதனிலும் சிறிய முழு எண்ணைக் கழித்தல் தொடர்பான கீழுள்ள உதாரணத்தின் படிமுறைகளை நன்றாகக் கற்றுக் கொள்க.

8763 இலிருந்து 1874 ஐக் கழிப்போம்.

படிமுறை 1

    5 13
  8 7 ~~6~~ 3
- 1 8 7 4
        9

படிமுறை 2

  6 15 13
  8 ~~7~~ ~~6~~ 3
- 1 8 7 4
      8 9

படிமுறை 3

  16 15 13
  ~~8~~ ~~7~~ ~~6~~ 3
- 1 8 7 4
    8 8 9

படிமுறை 4

  7 16 15 13
  ~~8~~ ~~7~~ ~~6~~ 3
- 1 8 7 4
  6 8 8 9

பாடப்புத்தகத்தில் 29, 30 ஆம் பக்கங்களை நன்றாகக் கற்றுக்கொள்ளவும். முழு எண் ஒன்றிலிருந்து அதனிலும் சிறிய முழு எண்ணைக் கழித்தல் தொடர்பாக நன்றாகக் கற்றுக்கொள்ளவும்.

பாடப்புத்தகத்தில் 31 ஆம் பக்கத்திலுள்ள பயிற்சி 3.2 ஐப் பூரணப்படுத்தவும்.


முழு எண் ஒன்றை மற்றுமொரு முழு எண் ஒன்றால் பெருக்குதல் தொடர்பாக பாடப்புத்தகத்தில் 32, 33 ஆம் பக்கங்களை நன்றாகக் கற்றுக்கொள்ளவும்.


- கீழே காட்டப்பட்டுள்ள பெருக்கல் அட்டவணையை நிரப்புக.

| x | 0 | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 |
| 1 | | | | 3 | | | | | | | | | |
| 2 | | | | 6 | | | | | | | | | |
| 3 | 0 | 3 | 6 | 9 | 12 | 15 | 18 | 21 | 24 | 27 | 30 | 33 | 36 |
| 4 | | | | 12 | | | | | | | | | |
| 5 | | | | 15 | | | | | | | | | |
| 6 | | | | 18 | | | | | | | | | |
| 7 | | | | 21 | | | | | | | | | |
| 8 | | | | 24 | | | | | | | | | |
| 9 | | | | 27 | | | | | | | | | |
| 10 | | | | 30 | | | | | | | | | |
| 11 | | | | 33 | | | | | | | | | |
| 12 | | | | 36 | | | | | | | | | |

பெருக்கல் அட்டவணையை உபயோகித்து இடைவெளிகளுக்குப் பொருத்தமான பெறுமானங்களை எழுதுக.

1)




பாடப்புத்தகத்தில் 34 ஆம் பக்கத்திலுள்ள பயிற்சி 3.3 ஐப் பூரணப்படுத்துக.

ஒரு முழு எண்ணை 10, 100, 1000 என்பவற்றால் பெருக்குதல் தொடர்பாக பாடப்புத்தகத்தில் 34 ஆம் பக்கத்தை நன்றாகக் கற்றுக்கொள்ளவும்.

ஒரு முழு எண்ணை 10, 100, 1000 என்பவற்றால் பெருக்கும் போது கிடைக்கும் விடையானது அவ்வெண்ணின் இறுதியில் இடப்படும் பூச்சியங்களின் எண்ணிக்கை மூலம் விளங்கிக்கொள்க.

- கீழுள்ள அட்டவணையை நிரப்புக.

| | |
|---|---|
| 3 x 10 | 30 |
| 7 x 10 | |
| 2 x 100 | |
| 15 x 100 | |
| 2 x 1000 | 2000 |
| 8 x 1000 | |
| 13 x 1000 | |

பாடப்புத்தகத்தில் 36 ஆம் பக்கத்தில் உள்ள பயிற்சி 3.4 இன் மூன்றாவது வினாவைச் சரியாகப் பூரணப்படுத்துக.

> இரு எண்களைப் பெருக்கும் போது சிறிய எண்ணால்
> பெரிய எண்ணைப் பெருக்க வேண்டும்.

ஒரு முழு எண்ணை மற்றுமொறு முழு எண்ணால் பெருக்குதல் தொடர்பாக பாடப்புத்தகத்தில் 35 ஆம் பக்கத்தை நன்றாகக் கற்றுக்கொள்ளவும். கீழுள்ள உதாரணங்களையும் விளங்கிக் கொள்க.

```
     7 4
  x  3 7
  -------
   5 1 8  ← 74 x 7 = 518
 2 2 2 0  ← 74 x 30 = 2220
  -------
 2 7 3 8
  =======
```

```
   1 5 3
  x  6 5
  -------
   7 6 5  ← 153 x 5 = 765
 9 1 8 0  ← 153 x 60 = 9180
  -------
 9 9 4 5
  =======
```

பாடப்புத்தகத்தில் 36 ஆம் பக்கத்திலுள்ள பயிற்சி 3.4 இல் 1, 2, 4, 5, 6, 7 ஆம் வினாக்களைச் சரியாகப் பூரணப்படுத்துக.

ஒரு முழு எண்ணை மற்றுமொறு முழு எண்ணால் வகுத்தல் தொடர்பாக பாடப்புத்தகத்தில் 37 ஆம் பக்கத்தை வாசித்து நன்றாக விளங்கிக்கொள்ளவும்.

- ஈவு , மீதி என்பவற்றைத் தெளிவாக இனங்காண்க.

கீழே காட்டப்பட்டுள்ள உதாரணங்களைத் தெளிவாக கற்றுக் கொள்க

$40 \div 10 = 4$
$500 \div 10 = 50$
$300 \div 100 = 3$
$8000 \div 100 = 80$
$5000 \div 1000 = 5$
$50000 \div 1000 = 50$

மேலுள்ள உதாரணங்களுக்கேற்ப ஒரு முழு எண்ணை 10, 100, 1000 என்பவற்றால் வகுக்கும் போது பின்பற்ற வேண்டிய ஒழுங்கு முறையை பாடப்புத்தத்தின் 38 ஆம் பக்கத்தைக் கற்று மேலும் உறுதிப்படுத்திக் கொள்க.

கீழுள்ள உதாரணங்களையும் விளங்கிக் கொள்க.

$525 \div 7$

```
     75
7 | 5 2 5
    49        7x7 = 49
    ---
     35
     35       7x5 = 35
    ---
      0
```

$525 \div 7 = 75$

$519 \div 12$

```
      43
12 | 519
     48       12x4 = 48
     ---
      39
      36      12x3 = 36
     ---
       3
```

$519 \div 12 = 43$ , மீதி 3

> ஒரு முழு எண்ணை மற்றுமொறு முழு எண்ணால் வகுப்பதற்கு நெடும் வகுத்தல் முறையைப் பயன்படுத்தலாம்.

- பாடப்புத்தகத்தில் 40 ஆம் பக்கத்திலுள்ள உதாரணம் 1 ஐ நன்றாக விளங்கிக் கொள்க.
- பாடப்புத்தகத்தில் 40 ஆம் பக்கத்திலுள்ள பயிற்சி 3.5 ஐச் சரியாகப் பூரணப்படுத்துக.